# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2260/12 - 2021 දෙසැම්බර් මස 27 වැනි සඳුදා - 2021.12.27

*2260/12 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**முதலாவது திருத்தம்**

*நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவையின் சேவைப் பிரமாணக்குறிப்பு*

*2017, ஏப்பிறல் 07 ஆந் திகதிய மற்றும் 2013/31 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பானது கீழ்காட்டப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்படுகிறது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களும் நிபந்தனைகளும் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.*

*அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,*

**எம். ஏ. பி. தயா செனரத்,**
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

*2021, திசெம்பர் 24.*

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் 10.3 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சகல விடயங்களுக்கும் பதிலாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உள்ளடக்கப்படுகின்றன:

10.3 விசேட தரத்திற்கு ஆட்சேர்த்தல்

10.3.1 ஆட்சேர்க்கப்படும் சதவீதங்கள்

| *பிரிவு* | *சதவீதம்* |
|---|---|
| சேவை அனுபவம் மற்றும் திறமை | 40% |
| சேவை மூப்பு | 60% |

**குறிப்பு** : விசேட தரத்திற்கு ஆட்சேர்க்கப்படும் போது வெற்றிடங்களைக் கணிக்கவேண்டியது அதற்கு முன்னருள்ள வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்குஆகும்.


1A - G 35670 — 15 (2021/12)


*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

10.3.2 சேவை அனுபவம் மற்றும் திறமை அடிப்படையின் கீழ் ஆட்சேர்த்தல்

10.3.2.1 பூரணப்படுத்த வேண்டிய தகைமைகள்

I. சேவை வகுதியின் I ஆம் தரத்தில் குறைந்தபட்சம் ஆறு (06) வருடங்கள் செயலூக்க மிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல் மற்றும் உரிய சம்பளவேற்றங்கள் ஆறினையும் (06) பெற்றிருத்தல்.

II. அரசாங்கசேவைஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 மற்றும் அதற்கு இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உள்ளாகியிருத்தலாகாது.

III. அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைக்கிணங்க தரமுயர்த்தல் தினத்திற்கு முன்னுள்ளதான ஆறு (06) வருடங்களுக்குள் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதற்கு உயர்ந்த மட்டத்தில் செயலாற்றுகைகளை உறுதிப்படுத்தியிருத்தல்.

IV. மூன்றாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையை உரிய தினத்தில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

சிரேஷ்ட தொழில்நுட்பவியல் பரீட்சையின் முதல் அரைப்பகுதியின் I ஆம் மற்றும் II ஆம் தொகுதியில் மற்றும் இரண்டாம் அரைப்பகுதியின் II ஆம் தொகுதியில் (அ) மற்றும் (ஆ) ஆகிய பிரிவுகளையுடைய பாடங்களில் சித்தியடைதல் வேண்டும்.

10.3.2.2 ஆட்சேர்க்கப்படும் முறை.- விசேட தரத்தில் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று நிலவும் வெற்றிடங்களுக்கு, மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பொறியியல் உதவியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபை ஒன்றின் மூலம் அட்டவணை 07 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சேவை அனுபவம் மற்றும் திறமை அடிப்படையில் வழங்கப்படும் புள்ளிகளின் திறமை ஒழுங்கிற்கமைய விசேட தரத்திற்கு தரமுயர்த்தப்படுவர்.

10.3.3 சேவை மூப்பு அடிப்படையின் கீழ் ஆட்சேர்த்தல்

10.3.3.1 பூரணப்படுத்த வேண்டிய தகைமைகள்

I. சேவை வகுதியின் I ஆம் தரத்தில் குறைந்தபட்சம் ஆறு (06) வருடங்கள் செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் உரிய சம்பளவேற்றங்கள் ஆறினையும் (06) பெற்றிருத்தல்.

II. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 மற்றும் அதற்கு இடைநேர்விளைவான சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உள்ளாகியிருத்தலாகாது.

III. அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைக்கிணங்க தரமுயர்த்தல் தினத்திற்கு முன்னுள்ளதான ஆறு (06) வருடங்களுக்குள் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதற்கு உயர்ந்த மட்டத்தில் செயலாற்றுகைகளை உறுதிப்படுத்தியிருத்தல்.

IV. மூன்றாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையை உரிய தினத்தில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

சிரேஷ்ட தொழில்நுட்பவியல் பரீட்சையின் முதல் அரைப்பகுதியின் I ஆம் மற்றும் II ஆம் தொகுதியில் மற்றும் இரண்டாம் அரைப்பகுதியின் II ஆம் தொகுதியில் (அ) மற்றும் (ஆ) ஆகிய பிரிவுகளையுடைய பாடங்களில் சித்தியடைதல் வேண்டும்.

10.3.3.2 ஆட்சேர்க்கப்படும் முறை.- விசேட தரத்தில் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று நிலவும் வெற்றிடங்களுக்கு, மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பொறியியல் உதவியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு அவ் உத்தியோகத்தர்களின் சேவை மூப்பு ஒழுங்கிற்கமைய அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விசேட தரத்திற்கு தரமுயர்த்தப்படுவர்.

குறிப்பு.- (i) விசேட தரத்தின் வெற்றிடங்கள் வருடாந்தம் நிரப்பப்படுவதோடு, ஒவ்வொரு வருடத்திலும் திசெம்பர் 31 ஆந் திகதியன்று நிலவும் வெற்றிடங்களுக்கு எதிர்வரும் வருடத்தின் சனவரி 01 ஆந் திகதி முதல் பதவியுயர்வுகள் வழங்கப்படும்.

12 (I) இன் குறிப்பு :

i. மட்டுப்படுத்தப்பட்ட பிரிவின் கீழ் பயிலுனர்களாக உள்ளீர்க்கப்படும் விண்ணப்பதாரர்களின் பயிற்சியின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையானது திறந்த பிரிவின் கீழ் ஆட்சேர்க்கப்படும் விண்ணப்பதாரர்களுக்காக நடாத்தப்படும் பயிற்சிக்குரிய பரீட்சை மட்டத்தில் இருத்தல் வேண்டும்.

ii. மூன்று (03) வருட நீர்ப்பாசன டிப்ளோமா பாடநெறியின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையின் புள்ளிகளின் அடிப்படையில் சேவை மூப்பினைத் தீர்மானித்தல் வேண்டும் என்பதோடு, ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையில் நேரடியாக ஆட்சேர்ப்பு செய்யப்படும் பொறியியல் உதவியாளர்களின் சேவை மூப்பினைத் தீர்மானித்தல் வேண்டும்.

**அட்டவணை - 07**

| | | |
|---|---|---|
| 1. சேவைமூப்பு | | - 60 புள்ளிகள் |
| 2. துறைசார் அறிவு மற்றும் புரிந்துணர்வு | | - 30 புள்ளிகள் |
| புலனாய்வு | - 6 புள்ளிகள் | |
| நிர்மாணம் | - 6 புள்ளிகள் | |
| நீர் முகாமைத்துவம் | - 6 புள்ளிகள் | |
| திட்ட முகாமைத்துவம் | - 6 புள்ளிகள் | |
| பராமரித்தல் மற்றும் செயற்படுத்தல் | - 6 புள்ளிகள் | |
| 3. செயலாற்றுகை மதிப்பீடு (அண்மைய ஐந்து வருடங்கள்) | | - 10 புள்ளிகள் |
| அதிசிறந்த/உன்னத | - 10 புள்ளிகள் | |
| சராசரியை விட மேல் | - 08 புள்ளிகள் | |
| திருப்திகரமான | - 06 புள்ளிகள் | |
| திருப்தியற்ற நிலை | - 00 புள்ளிகள் | |

EOG 12-0286

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.